## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 2-2 - காசையாடை
## (திரு எவ்வுளூர்)

1058 * காசையாடை மூடியோடிக் * காதல் செய்தான் அவனூர் *
நாசமாக நம்ப வல்ல * நம்பி நம்பெருமான் **
வேயின் அன்ன தோள் மடவார் * வெண்ணெய் உண்டான் இவன் என்று *
ஏச நின்ற எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 1

1059 தையலாள் மேல் காதல் செய்த * தானவன் வாள் அரக்கன் *
பொய்யிலாத பொன் முடிகள் * ஒன்பதோடு ஒன்றும் ** அன்று
செய்த வெம்போர் தன்னில் * அங்கோர் செஞ்சரத்தால் உருள *
எய்த எந்தை எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 2

1060 முன்னோர் தூது * வானரத்தின் வாயில் மொழிந்து * அரக்கன்
மன்னூர் தன்னை * வாளியினால் மாள முனிந்து ** அவனே
பின்னோர் தூது * ஆதி மன்னர்க்காகிப் பெருநிலத்தார் *
இன்னார் தூதன் என நின்றான் * எவ்வுள் கிடந்தானே 3

1061 பந்தணைந்த மெல்விரலாள் * பாவை தன் காரணத்தால் *
வெந்திறல் ஏறேழும் * வென்ற வேந்தன் விரிபுகழ் சேர் **
நந்தன் மைந்தனாக ஆகும் * நம்பி நம்பெருமான் *
எந்தை தந்தை தம் பெருமான் * எவ்வுள் கிடந்தானே 4

1062 பாலனாகி ஞாலம் ஏழும் உண்டு * பண்டு ஆலிலை மேல் *
சால நாளும் பள்ளி கொள்ளும் * தாமரைக் கண்ணன் எண்ணில் **
நீலமார் வண்டுண்டு வாழும் * நெய்தலந்தண் கழனி *
ஏல நாறும் பைம்புறவில் * எவ்வுள் கிடந்தானே 5

1063 சோத்த நம்பி என்று * தொண்டர் மிண்டித் தொடர்ந்து அழைக்கும் *
ஆத்த நம்பி செங்கணம்பி * ஆகிலும் தேவர்க்கெல்லாம் **
மூத்த நம்பி முக்கணம்பி என்று * முனிவர் தொழுது
ஏத்தும் * நம்பி எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 6

1064 திங்கள் அப்பு வான் எரி காலாகி * திசை முகனார்
தங்கள் அப்பன் * சாமியப்பன் பாகத்திருந்த ** வண்டுண்
தொங்கலப்பு நீள் முடியான் * சூழ் கழல் சூட நின்ற *
எங்கள் அப்பன் எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 7

1065 முனிவன் மூர்த்தி மூவராகி * வேதம் விரித்துரைத்த
புனிதன் * பூவை வண்ணன் அண்ணல் * புண்ணியன் விண்ணவர் கோன் **
தனியன் சேயன் தான் ஒருவன் ஆகிலும் * தன் அடியார்க்கு

இனியன் * எந்தை எம்பெருமான் * எவ்வுள் கிடந்தானே 8

1066 பந்திருக்கும் மெல்விரலாள் * பாவை பனிமலராள் *
வந்திருக்கும் மார்வன் * நீல மேனி மணிவண்ணன் **
அந்தரத்தில் வாழும் * வானோர் நாயகனாய் அமைந்த *
இந்திரற்கும் தம் பெருமான் * எவ்வுள் கிடந்தானே 9

1067 * இண்டை கொண்டு தொண்டர் ஏத்த * எவ்வுள் கிடந்தானை *
வண்டு பாடும் பைம்புறவில் * மங்கையர் கோன் கலியன் **
கொண்ட சீரால் தண் தமிழ் செய் மாலை * ஈரைந்தும் வல்லார் *
அண்டம் ஆள்வது ஆணை * அன்றேல் ஆள்வர் அமருலகே 10

**அடிவரவு:** காசையாடை தையலாள் முன் பந்தணைந்த பாலன் சோத்தம்
சோத்தம் திங்கள் முனிவன் பந்திருக்கும் இண்டை வில்